<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>
<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>
<u>**MCOP . No.57/2024**</u>

**ம.சா.1 கனிஷ்கர், த/பெ சுரேஷ்பாபு** **<u>நாள் : 15.06.2026</u>**

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து நேரத்தில் என் அம்மா பெயரில் உள்ள எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை நான் ஓட்டி சென்றேன். அந்த வாகனத்தை சோழமண்டலம் காப்பீட்டு நிறுவனத்திடம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. என் அம்மாவின் வாகனத்தை சம்பவதன்று நான் ஓட்டி சென்றேன். 1 ஆம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது. அதனால் அவர் பெயரில் முதல் தகவல் அறிக்கை ஜோலார்பேட்டை காவல்நிலையத்தால் குற்ற எண் 323/2023 என்று பதிவு செய்யப்பட்டு இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ஆம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பதால் அவர் தான் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரிதான். நான் விபத்தின் போது பி.காம் படித்து வந்தேன். அதன் பிறகு கல்லூரிக்கு செல்ல முடியாமல் பாதியிலேயே நின்று விட்டேன். ம.சா.ஆ.14 மருத்துவ ரசீது நகல்களை தாக்கல் செய்துள்ளேன் என்றும், அசல் என்னவானது என்றால் அவை தொலைந்துவிட்டது. ம.சா.ஆ.14 நகல் என்பதால் அதை நான் கோர முடியாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13 ஆவணமும் பிரதி என்பதால் அதை நான் கோர முடியாது என்றால் சரியல்ல. ரூ.30,000/– மாதம் சம்பாதித்தற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் எந்த ஒரு வியாபாரமும் செய்யவில்லை விபத்தின் போது படித்துக் கொண்டுதான் இருந்தேன் என்றும் வழக்கிறக்காக வியாபாரம் செய்து ரூ.30,000/– சம்பாதிப்பதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்பதால் 3 ஆம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க தேவையில்லை என்றால் சரிதான். 1 ஆம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.